விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 149 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 03 புதன்கிழமை (17.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே




# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை

(யாழ்ப்பாணம்)

- நினைவேந்தலுக்கு தயார் நிலையில் தமிழர் தாயகம்.
- வடக்கு, கிழக்கு எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள்.
- முள்ளிவாய்க்கால் முற்றத்தை நோக்கி ஊர்திப் பவனி.
- இராணுவத்தினரின் கெடுபிடிகளும் தாராளம்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## கோப்பாயில் தீயில் எரிந்த முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் தீயில் எரிந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த கார்த்திகேசு திருப்பதி (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார்.

தனிமையில் வசித்து வந்த இவர், நேற்றுக் காலை 6 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடைப்பட்ட நேரத்தில் உயிரை மாய்த்திருக்கலாமென கருதப்படுகிறது.

வீட்டுக்கு சென்ற உறவினர் ஒருவர் 11

# வடக்கில் சிறுவர்கள் கடத்தல் முயற்சி

- பொதுமக்கள் இடையே பயப்பீதி
- பொலிஸார் தீவிர விசாரணை

*(யாழ்ப்பாணம்)* வட மாகாணத்தில் சிறுவர்கள் கடத்தல் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுவரும் நிலையில் இது பொதுமக்கள் இடையே பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளதோடு பொலிஸார் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## மே - 18 நினைவேந்தலில் ஈடுபட்டவர் கைது

(மட்டக்களப்பு)

மே 18 நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட்ட அகம் மனிதாபிமான வள நிலைய உத்தியோகத்தர் நேற்று மதியம் மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, 11

## கோட்டாவை கொலை செய்ய சதி
## தமிழ் அரசியல் கைதி ஒருவர் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியதாக சந்தேகத்தில், பயங்கரவாத தடைச் சட் 11

## அம்மன் சிலையை அகற்றக்கோரும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை
### நீதிபதி ஆனந்தராஜா தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் நுழைவாயிலாக இருக்கும் பண்ணைச் சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நாக பூசணி அம்மன் சிலையை அகற்றுவதற்கு அனுமதி கேட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது. 11



## பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சுதந்திர கல்வி மற்றும் வைத்திய 11



## சிறுவர் கடத்தல் முயற்சி ஒருவர் மடக்கிப் பிடிப்பு
### மனநலம் பாதிக்கப்பட்டவர் என விசாரணையில் தெரிய வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் சிறுவர்களை கடத்த முயன்றார் என அப்பகுதி மக்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸா

## சிறுவர்கள் கடத்தல் பயத்தால்
## கிளிநொச்சியில் வியாபாரத்துக்கு வந்த வாகனம் அடித்து நொருக்கப்பட்டது

(கிளிநொச்சி)

சிறுவர்கள் கடத்தப்படுகின்றனர் என்ற பயப்பீதியினால் கிளிநொச்சியில் நேற்று வியாபாரத்துக்கு வந்த வாகனம் ஒன்று அடித்து நொருக்கப்பட்டதோடு அதில் பயணித்த மூவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் வை.எம்.சி.ஏ வீதியில் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நினைவஞ்சலியும்



தோற்றம் 1937 03 15

மறைவு 2023 04 17

அமரர்

## வயிரமுத்து கதிர்காமநாதன்

(பெரியநாவலடி ஞான வைரவர் கோவில் தர்மகர்த்தா)

திதி : தேய்பிறை திரயோதசி

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று 17.05.2023 புதன் கிழமை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(C-6565)

பெரியநாவலடி, கொடிகாமம்.

077 801 2258
077 711 1241

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக நண்பரும் வவுனியா பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. **சி.திருஞானசம்பந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## வைரமுத்து சிவபாதவிருதயர்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மண்ணில் 29.06.1937

விண்ணில் 15.05.2023

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
**வலம்புரி நண்பர்கள்**

# 7 ஆம் ஆண்டு 6 ஆம் ஆண்டு நினைவுகள்



பிறப்பு : 12.05.1939 இறப்பு : 10.08.2016

## வயிரமுத்து சிவலிங்கம்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

திதி : அட்டமி



பிறப்பு : 23.11.1950 இறப்பு : 24.05.2017

## சிவலிங்கம் கனகமணி

திதி : திரயோதசி

அன்பின் உருவாகிய
எம் அன்புக்கினிய தெய்வங்களே!
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகளுடன் வாழ்வோம்

(15537)

குப்பிளான் தெற்கு, ஏழாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## திருமதி கிருஷ்ணன் செல்வநாயகி

பிறப்பு 1937.12.25

இறப்பு 2023.05.15

கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன்(முத்து) செல்வநாயகி அவர்கள் (15/05/2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (கந்தவனம்-விஷகடி வைத்தியர்) சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியினரின் அன்பு ம்ருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணன் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு ம்னைவியும், கமலநாயகி, விமலநாயகி, தேவரஞ்சினி, மனோரஞ்சினி, தவச்செல்வன் தவரூபன், ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷ்ணராஜா, காலஞ்சென்றவர்களான, கதிர்காமத்தம்பி, ஆனந்தராஜா அவர்களின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தவமலர் மற்றும் தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான குலசிங்கம், பாலச்சந்திரன் மற்றும் சிவாஸ்கரன் பிரணவன், இளவரசி, கிருஷ்ணப்பிரபா, ஸ்ரீகரன் அவர்களின் பாசமிகு மாமியாரும் பார்த்தீபன், பிரசாந்தி, கிருஷாந்தி அஜந்தா, ஆதர்சன், தசீகரன், ரிசிகரன், வைஷ்ணவி, லக்ஷ்யா, கிருஷ்ணகரின், ஆதித்தியன், மகதி, சூரியன், நிலா, மானஷா, சுபீட்ஷா, நிதுசகன், கம்சத்தனி, சிவகரன், ரகுநாதன், கிருஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் வர்ணன், வருண், வர்ஷிகா, கிருஷ்ணகன், ரிஷா, நவீட்டா, கர்ஷா, விபீட்ஷா, சஷ்மி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17/05/2023 இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(மகன்) தவரூபன் : +14163174212
(மகன்) தவச்செல்வன் : +14167224993
(மகள்) ஸ்ரீரஞ்சினி : 077 732 5585
(மகள்) தேவரஞ்சினி : 077 722 2500
(மகள்) மனோரஞ்சினி : 072 731 5006
(பேரன்) பார்த்தீபன் : +14162625234

(15533)

கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் உள்ள விகாரைகளை பாதுகாக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அஸ்கிரிய பீடம் எச்சரிக்கை



(கொழும்பு)

**பௌத்த பாரம்பரியத்தை வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அஸ்கிரிய பீடத்தின் பிரதிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வடக்கு -கிழக்கில் உள்ள பௌத்த புனித ஸ்தலங்களுக்கு எதிராக இனவாத தமிழ் அரசியல்வாதிகளும் தீவிரவாத குழுக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் இது இன மோதலை உருவாக்கும் திட்டமிட்ட செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் மற்றும் தொல்பொருள் இடங்களுக்கு கடும் எதிர்ப்புக்கள் காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இனவாத வெறி பிடித்த சில அரசியல்வாதிகளும் அந்த தீவிரவாத அமைப்புகளும் திட்டமிட்டு இந்த இடங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை பாரதூரமானது.

270 வருடங்களுக்கு முன்னர் இந்த இலங்கைப் பெரு மக்கள் சந்தித்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலையில் பல சியாமியத் துறவிகள் மற்றும் பௌத்த தூதுக்குழுவொன்று வந்திறங்கியதற்கு இந்த தமிழ் இனவாத அமைப்புகளின் சில பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் இந்த இடத்திற்கு வந்து கடுமையான எதிர்ப்பை முன்வைத்திருந்தன.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் செயற்படவில்லை என்றால், நாட்டில் ஒரு தீவிரமான மத மற்றும் பிறதேசிய நெருக்கடியை உருவாக்குவதைத் தடுக்க வழி இல்லை. "தற்போதைய அரசாங்கமும் இதில் கவனம் செலுத்தாமல் செயற்பட்டு வருவதாக நாரம்பனை ஆனந்த தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று தற்போதைய அரசாங்கத்தில் உள்ள எவரும் இவ்விடயம் தொடர்பில் பேசுவதில்லை.

இன்றைய அரசாங்கம் ஆளுநர்களை நியமிக்கும் போதும் சிங்கள பௌத்த மக்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது. எனவே பௌத்த பாரம்பரியத்தை வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாடு முழுவதிலும் உள்ள பௌத்தர்களும் மதவாதிகளுக்கு மட்டுமன்றி சமய ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இவ்வாறான தீவிரவாத அமைப்புகளையும் அடிப்படைவாத மதக் குழுக்களையும் ஒடுக்க வேண்டும் என்பதை அரசாங்கத்திற்கு வலியுறுத்தவும் நினைவூட்டவும் விரும்புகின்றோம் எனவும் தெரிவித்தார். (நி)

## இலங்கையில் மீண்டும் நில அதிர்வு

(கொழும்பு)

கதிர்காமம் - லுனுகம் வெஹேர பகுதியில் சிறு அளவிலான நில அதிர்வொன்று பதிவாகியுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை 2.5 ரிக்டர் அளவில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளதாகவும் இந்த நில அதிர்வினால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை. எனவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டின் தென்பகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான நில அதிர்வுகள் பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## மேலும் ஒரு தொகை யூரியா இறக்குமதி

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டிற்கு மேலும் ஒரு தொகை யூரியா உரத்தினை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 25 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## மருந்துப் பொருட்களின் விலைகளில் மாற்றம்

### கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் மருந்துப் பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துரைத்த போதே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதனை தெரிவித்தார்.

இதேவேளை மருந்துப் பொருட்களின் விலையானது தற்போது அதிகரித்து காணப்படுகின்றது என்பதனை மறுக்க முடியாது.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற விலைகள் விரைவில் மாற்றம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நினைவேந்தல் நிகழ்வுகளை தடுத்து நிறுத்த வேண்டும்

## குமுறும் சரத்வீரசேகர



(கொழும்பு)

போரில் இறந்த உறவுகளை வீட்டுக்குள் நினைவுகூரலாம். ஊர்திப்பவனி, கஞ்சி வழங்கல், விளக்கேற்றல் எதுவும் தேவையில்லை என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பின் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் "வடக்கு - கிழக்கில் உறவுகள் என்ற போர்வையில் புலிப் பயங்கரவாதிகளை ஆண்டுதோறும் ஒரு தரப்பினர் பகிரங்கமாக நினைவேந்தி வருகின்றனர். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் வடக்கு - கிழக்கில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் தென்னிலங்கை ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "அரசு நினைவேந்தல்களுக்கு அனுமதி [illegible]வதால் புலிப் பயங்கரவாதிகளையும் தமிழ்த் தரப்பினர் நினைவேந்தி வருகின்றனர். அத்தகைய நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

போரில் இறந்த உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்த வேண்டுமெனில் அவர்கள் தங்களது வீடுகளுக்குள் அதனைச் செய்ய முடியும்.

அதைவிடுத்து ஊர்திப் பேரணிகள் மூலமும் கஞ்சிகள் வழங்கியும் பொது இடங்களில் விளக்கேற்றியும் வழிபட வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர் [illegible] அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மின்கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்க முன்மொழிவு

(கொழும்பு)

ஜூலை முதலாம் திகதி முதல் மின்சார சபையினால் அமுல்படுத்தப்படவுள்ள மின் கட்டண திருத்தம் தொடர்பான மின் கட்டண முன்மொழிவு நேற்று முன்தினம் பிற்பகல் பொது பயன்பாட்டு ஆணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

அதன்படி, மின்சார கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதாக மின்சார சபை தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

மின்சார உற்பத்தி தரவுகள் மற்றும் விற்பனை தரவுகள், எரிபொருள், நிலக்கரி மற்றும் இதர மூலப்பொருட்களின் விலை மற்றும் இந்த ஆண்டுக்கான மின்சார உற்பத்தித் திட்டம் மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாக, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மின் உற்பத்திக்கான செலவு தற்போது குறைந்துள்ளது.

டீசல், பெற்றோல், நிலக்கரி போன்றவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், மின்சாரத் தேவையும் சுமார் 18 சதவீதத்தால் குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு மின்சார கட்டணத்தை சுமார் 20 வீதத்தால் குறைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

பொருட்கள் விற்பனை செய்வதற்காக சென்ற வாகனமே பொதுமக்களால் இவ்வாறு மடக்கி பிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து வாகனத்தில் இருந்த சந்தேகநபர்களும் தாக்கப்பட்டு காயப் படுத்தப்பட்டனர்.

காயமடைந்த மூவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணை களை கிளிநொச்சி பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (ம-7,9,33,100)


பெண் விற்பனையாளர்

# தேவை

எமது பிடவை சோரூமுக்கு பிடவை அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. (15541)

சென்னை பெசன் வேல்ட்

63, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## சிற்றுண்டிச்சாலை கேள்வி மனு கோரல் - 2023

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி சிற்றுண்டிச்சாலை 2023ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கு பொருத்தமான ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றன. இடைநிலைப்பிரிவு, உயர்தரப் பிரிவு ஆகிய இரண்டு பகுதிகளிலும் தலா ஒரு சிற்றுண்டிச்சாலை வீதம் இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் அமைந்துள்ளன. கேள்வி கோரலின்போது தனித்தனியே இரண்டு சிற்றுண்டிச்சாலைக்கும் வெவ்வேறாக கேள்வி மனு சமர்ப்பித்தல் வேண்டும்

கேள்வி மனுகோரலின்போது ஒரு விண்ணப்பப்படிவத்திற்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூ.1000 (அரசவரி உட்பட) பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 19.05.2023 தொடக்கம் மு.ப 9.00 மணி - பி.ப 2.00 மணி வரை உரிய கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்தினை பெற்று 06.06.2023 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி என்னும் முகவரிக்கு சேர்த்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிற்றுண்டிச்சாலையை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் 2023 எனக் குறிப்பிடல் வேண்டும்

**ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் கேள்வி கோரல் மனுக்கள் எதிர்பார்க் கப்படுகின்றது.**

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**
**யாழ்ப்பாணம்.**

**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**
**யாழ்ப்பாணம்**

(C-6569)

## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை

## சபை நிதி / அபிவிருத்தி வேலைத்திட்டம் - கட்டம் II

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப் பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத் தப்படும். ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதி 04/2016 (iii)ஆம் இலக்க 2021.02.18 மற்றும் 04/2016 (iv) இலக்க 2023.02.09 ஆம் திகதி பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்த மான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப் பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - **021-222-2700, 021-3142841**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவண மொன்றை **தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2023.05.17 திகதி யிலிருந்து 2023.06.06ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 15.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டண மாக ரூபா 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2023.06.07**ம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிரா கரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2023.05.29**ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| சபைநிதி வேலைகள் - 2023 | | | | | | | | |
| 1. | NPS/CF-II/2023/WD - 01/01 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 01 | 4.02 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 60,500.00 | 2023.09.04 |
| 2. | NPS/CF-II/2023/ WD - 02/02 | 2.வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 02 | 4.32 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 65,000.00 | 2023.09.04 |
| 3. | NPS/CF-II/2023/ WD - 03/03 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 03 | 3.49 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 53,500.00 | 2023.09.04 |
| 4. | NPS/CF-II/2023/ WD - 05/04 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 05 | 1.60 | 90 நாட்கள் | C9/ C8 | 2023.07.24 | 24,500.00 | 2023.08.21 |
| 5. | NPS/CF-II/2023/ WD - 06/05 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 06 | 3.96 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 59,500.00 | 2023.09.04 |
| 6. | NPS/CF-II/2023/ WD - 07/06 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 07 | 2.67 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 40,500.00 | 2023.09.04 |
| 7. | NPS/CF-II/2023/ WD - 08/07 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 08 | 2.66 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 40,500.00 | 2023.09.04 |
| 8. | NPS/CF-II/2023/ WD - 09/08 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 09 | 3.64 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 55,500.00 | 2023.09.04 |
| 9. | NPS/CF-II/2023/ WD - 11/09 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 11 | 0.70 | 30 நாட்கள் | C9/ C8 | 2023.08.07 | 10,500.00 | 2023.09.04 |
| 10. | NPS/CF-II/2023/ WD - 12/10 | வட்டார ரீதியான வீதி புனரமைப்பு வேலைகள் – வட்டாரம் 12 | 4.18 | 90 நாட்கள் | C9/ C8/C7 | 2023.08.07 | 63,000.00 | 2023.09.04 |
| அபிவிருத்தி நிதி வேலைகள் - 2022 | | | | | | | | |
| 11. | NPS/DF-II/2022/ 11 | கொக்குவில் பொதுச் சந்தை தொகுதியில் மரக்கறிச் சந்தை மற்றும் கடைகளை புனரமைத்தல். | 7.46 | 120 நாட்கள் | C8/ C7/C6 | 2023.08.22 | 107,500.00 | 2023.09.19 |
| 12. | NPS/DF-II/2022/ 12 | கொங்கிறீற், கிறனைற் கற்களினால் வரவேற்புப் பெயர்பலகை அமைத்தல் | 1.93 | 60 நாட்கள் | C9/ C8 | 2023.07.24 | 29,000.00 | 2023.08.21 |

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(C-6566)

2023.05.17

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒருவித நோய்த் தாக்கத்தால் நிலக்கடலை செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

கண்டாவளைப்பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் கல்மடுக்குளம் புனரமைப்பு காரணமாக இம்முறை சிறுபோக நெற்செய்கை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக சில விவசாயிகள் தமது வயல் நிலங்களில் நிலக்கடலை செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலக்கடலை செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தற்பொழுது நிலக்கடலை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதம் கடந்து வரும் நிலையில் நிலக்கடையில் ஏதோ ஒரு வகையான நோய்த்தாக்கத்தால் வேர் பகுதியில் அழுகிய நிலையில் காணப்படுகின்றது என தெரிவிக்கின்றனர். அத்துடன் நிலக்கடலையில் விளைச்சலும் இல்லாத நிலையில் உள்ளதாகவும். பல லட்சம் செலவு செய்து பலனடைய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் உரிய தீர்வுகளை பெற்றுத் தர வேண்டும் என தெரிவித்துள்ளனர். (4-6-316)

# புகையிரத பாதையினை மறித்து கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

## புகையிரத வேலை இடைநிறுத்தம்



(குருமன்காடு)

வவுனியாவில் புகையிரத பாதையினை மறித்து கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் புகையிரத பாதை அமைக்கும் செயற்பாடு நேற்றுமுன்தினம் இடைநிறுத்தப்பட்டது.

வவுனியா தோணிக்கல் வீதியிலிருந்து இருந்து ஏ-9 வீதிக்கு செல்வதற்காக ஆலடி பகுதியில் அமைந்துள்ள புகையிரத கடவையினை கடந்த பல வருடங்களாக சுமார் 1000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வடக்கிற்கான புகையிரத பாதையினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின்னை முன்னெடுக்கப் பட்டு வருகிறது. குறித்த புகையிரத கடவை ஊடாக செல்வதற்கு தடையேற்படுத்தும் முகமாக புகையிரத பாதையினை அமைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். (4-6-250)

# மன்னாரில் துப்பாக்கிச் சூடு ஒருவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள கரிசல் கிராமப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள கரிசல் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் போதைப் பொருள் உள்ளதாக விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் கிடைத்ததாது.

இதன் போது குறித்த பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் இருவர் சிவில் உடையில் சென்றுள்ளனர்.

இதன் போது சோதனைகளை முன்னெடுக்க முயன்ற போது குறி த்த நபர் கத்தியை எடுத்து தாக்க முயன்ற நிலையில் அவர்கள் வைத்திருந்த துப்பாக்கியால் குறித்த நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உடனடியாக குறித்த நபர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-285)

# முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி யாழில் பல இடங்களில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தமிழ் இனப்படுகொலையின் நினைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஊர்திப் பவனி ஐந்தாவது நாளாக யாழ்ப்பாணம் நகர் மற்றும் நல்லூர் பகுதிகளில் பயணித்தது.

ஊர்திபவனி யாழ் நகரில் தரித்திருந்தபோது பொதுமக்கள் பலரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம் பெறுவது வழக்கம். இதன் ஒரு அங்கமாக தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையை இளஞ் சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவு படங்கள் தாங்கிய ஊர்திப் பவனியானது கடந்த 12 ஆம் திகதி தொடங்கப்பட்டது.

குறித்த ஊர்தி வடக்கின் ஐந்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து இறுதியில் முள்ளிவாய்க்காலை அடையவுள்ளது. (4-6-33

# இராசிபலன்

17.05.2023
வைகாசி 03, புதன்கிழமை
திரயோதசி முன்னிரவு 11.01 மணிவரை

ரேவதி முற்பகல் 8.17 மணிவரை
சுபநேரம் -4.23-5.53 மணிவரை
இராகுகாலம்-11.53-1.23 மணிவரை

பிரதோச விரதம்.
சந்திராஷ்டமம் -பூரம்

வளவன்

**மேஷம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எண்ணிய காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கடகம்** தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உற்சாகமான நாள்.

**சிம்மம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமைதென்படும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், தொழில் நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி** மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், மனக் குழப்பங்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசனசுகமுண்டு.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பப் பொறுப்புகள் கூடும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

முதலில் நீங்கள் உங்களை மதித்தால்தான் மற்றவர்கள் மதிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலையாளிகளை
# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் - சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் முடிவல்ல இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சி செயலாளர் நாயகமுமான எம் கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் அரச படைகளினாலும், சிங்களக் காடையர் குழுக்களாலும் தமிழ் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்களுக்கு எமது அஞ்சலிகள் என்றும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை, போர்க் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வோம்.

தமிழ் இனப் படுகொலைகள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் ஈடுசெய் நீதி கிடைக்கவும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் அரசியல் தீர்வைக் காண சுதந்திரத்திற்கான பொதுசன வாக்கெடுப்பு ஒன்றினை நடத்த வேண்டும்.

ஒன்றை இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் வாழ்ந்து வரும் பரம்பரையினரும் (புலம்பெயர் மக்களும் உட்பட) கலந்து கொள்ளும் வகையில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தைக் கோருகின்றோம்.

கட்டாயமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட தமிழ் மக்களுக்குச் சர்வதேச நீதி கிடைக்கச் செய்வோம் என்றும் தமிழர்களின் தாகம்! தமிழ் ஈழத் தாயகம் எனவும் தெரிவித்தார். (4-6-104)

# சீனா வழங்கும் வீட்டுத்திட்டங்கள் அரசியல் நோக்கமாக இருக்கக் கூடாது
## ஐ.ம.ச வின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

(அராலி)

வடபகுதிக்கு சீனாவினால் வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் அரசியல் நோக்கங்களை அடைவதற்கான திட்டங்களாக அமையக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு வீடு அமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்திகளுக்காக சீன அரசாங்கம் பாரிய நிதி ஒன்றை வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

சீன அரசாங்கம் உதவி செய்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் வடபகுதியில் அரசியல் நோக்கங்களை அடைவதற்காக திட்டங்களை வழங்குவது எமது மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் வடமாகாணத்துக்கு வழங்கப்பட்ட சுமார் 2500க்கும் மேற்பட்ட வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்படாமல் கிடப்பில் இருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திய போது தற்போதைய அரசாங்கம் தம்மிடம் நிதி இல்லை என காரணம் கூறும் நிலையில் மழைக் காலங்களில் குறித்த வீட்டில் வசிப்போர் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஆனால் தற்போது சீனா வீட்டுத் திட்டத்தை வழங்கப் போகிறது என அமைச்சர் கூறும் நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை பூரணப்படுத்தாதவர்களுக்கு ஏன் சீனாவின் நிதியை வழங்க முடியாது.

வடபகுதி கடற்கரையோரங்களை சீனா இலக்கு வைத்து அயல் நாடான இந்தியாவுக்கு சவால் விடுவதற்கு எமது மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தக் கூடாது.

ஆகவே வடபகுதியில் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு முழுமை பெறாத விபரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்று அவர்களின் வீடுகளை முழுமைப்படுத்த உதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

# மாடு கடத்தலில் ஈடுபட்ட இருவர் மடக்கிப் பிடிப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய முன்றலில் மாடு கடத்தலில் ஈடுபட்ட இருவர் பிரதேச இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

முள்ளியவளை பகுதியில் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்காக கால்நடை வளர்த்து வரும் நிலையில் கால்நடைகள் தொடர்ச்சியாக காணாமல் போயுள்ளன.

இந்த நிலையில் இறைச்சிக்காக மாடு கடத்தும் கும்பல் ஒன்று இரவு நேரங்களில் மாடுகளை கடத்துவதாக பிரதேச இளைஞர்களுக்கு தகவல் கிடைத்துள்ள நிலையில் முள்ளியவளை இளைஞர்கள் விழிப்படைந்துள்ளார்கள்.

இதனையடுத்தே நேற்று முன்தினம் இரவு முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் மோட்டார்சைக்கிளை வேறு இடத்தில் விட்டு விட்டு ஆலய சூழலுக்கு அருகில் நின்ற மாட்டினை பிடிப்பதற்காக வந்த வேளை பிரதேச இளைஞர்களால் துரத்தி பிடிக்கப்பட்டனர். முள்ளியவளை பிரதேச இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்ட இரண்டு சந்தேகநபர்களும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (4-6)


**தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில்**
**வருடாந்த வெளிமடை உற்சவம் - 26.05.2023**

**தற்காலிக கடை வழங்குதல் பற்றிய அறிவித்தல்**

கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கடை வைக்க விரும்புவோர் 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெ.ப.அ.கோ சபை காரியாலயத்திற்கு சமுகமளிக்கவும்.
கடை வழங்குதல் 10.00 மணியில் இருந்து 12.00 மணிவரை நடைபெறும்.

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்,**
**தரும பரிபாலன சபை.**
(C-6564)


# திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குரு பூசையினையொட்டி பாடசாலை மாணவர்களுக் கிடையில் சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டும், மனனம் செய்யும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலும் மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

பாலர் வகுப்பு, தரம் 1,2,3 மாணவர்களுக்கு இப்போட்டி இடம்பெறவுள்ளது. பாலர் வகுப்பு, தரம் 1, 2 இற்கு தோடுடைய செவியன், மந்திரமாவது நீறு ஆகிய இரு திருமுறைகளும் தரம் 3 இற்கு தோடுடைய செவியன், காதலாகிக் கசிந்து ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்து ஒப்புவித்தல் வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பாலர் வகுப்பு, தரம் 1 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தரம் 2 மாணவர்களுக்கு காலை 9 மணிக்கும். தரம் 3 மாணவர்களுக்கு பி.ப 2 மணிக்கும் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 26 ஆம் திகதியாகும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபி விருத்திக்கழக அறிவகம் இல.82 (144) நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பி.ப 3 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என சைவசமய அபி விருத்திக்கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறிகாந்தன் தெரிவித்துள்ளார். (4)

# 'லண்டனில் இருந்து விமல்' நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரபல ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் எழுதிய "லண்டனில் இருந்து விமல்" நூல் அறிமுக விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலை கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 320 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 200 | 200 |
| தக்காளி | 550 | 400 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 150 | 240 | 150 | 400 |
| பூசணி | 80 | 80 | 70 | 100 |
| புடோல் | 120 | 140 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 400 |
| வெண்டக்காய் | 120 | 140 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 130 | 200 |
| பயற்றங்காய் | 200 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | -- | 350 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 550 | 400 | 800 |
| போஞ்சி | 550 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 280 | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 180 | 200 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 350 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | — | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் யுத்த குற்றவாளிகளுக்கு பிரிட்டன் தடை விதிக்க வேண்டும்

### பிரிட்டனின் அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழுவின் தலைவர் கோரிக்கை

(லண்டன்)

இலங்கையின் யுத்த குற்றவாளி களிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதிக்க வேண்டும் என தமிழர்களிற்கான பிரிட்டனின் அனைத்து கட்சி பாரா ளுமன்ற குழுவின் தலைவர் எலியட் கோல்பேர்ன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை யின் நினைவேந்தல் நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஏனைய சர்வதேச நாடுகளை பின் பற்றி பிரிட்டன் இலங்கையின் யுத்த குற்றவாளி களிற்கு எதிராக மக்னிட்ஸ்கி பாணியிலான தடைகளை விதிக்க வேண்டும்.

இதற்கு மன்னிப்பு இல்லை. தமி ழர்களின் எதிர்காலத்திற்காக நாம் உழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்றுக் காலை வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி, டொலரின் கொள்விலை 305.43 ஆகவும் விற்பனை விலை 318.79 ஆகவும் பதிவாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி டொலரின் பெறுமதி 362.66 ரூபாவாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பருகிய சுற்றுலாப் பயணிகள்



(திருமலை)

முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி பரிமாறும் நிகழ்வு திருக்கோணமலை சல்லி கிராமத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பொதுமக்கள் உட்பட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் துக்கத்தை பகிர்ந்து கொண்டிருந்தார்கள். (நி)

## கண்பார்வை பாதிப்பு விவகாரம்; இந்தியாவிடம் இழப்பீடு கோரியது இலங்கை

(கொழும்பு)

இந்திய மருந்துப் பயன்பாட்டினால் கண்பார்வை பாதிப்பு ஏற்பட்ட விவகாரத்தை அடுத்து குறித்த மருந்தை தயாரித்த இந்திய நிறுவனத்திடம் இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரினால் நிறுவனத்திடம் உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனத்திடம் இருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும், மருந்தை கொள்வனவு செய்த முகவர்களிடமும் இதனை அறிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நோயாளர்களின் அவலநிலை குறித்து கவலை தெரிவித்த அமைச்சர், சில சமயங்களில் தரக் குறைபாடுகள் ஏற்படுகின்றன என்றும் உலக அளவிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி மூன்று அரச மருத்துவமனைகளில் கண்புரை அறுவை சிகிச்சைக் குப் பின்னர் பயன்படுத்தப்படும் கண் சொட்டு மருந்தைப் பயன்படுத்தியதால் பலருக்கு கண்பார்வை பாதிக்கப்பட்ட சம்பவம் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சுமார் 30 நோயாளிகள் கண் பார்வை குறைபாடு ஏற்பட்டமை கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் இழப்பீடும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இடைக்கால அனர்த்த முகாமைத்துவ திட்டம் பரீட்சை ஆணையாளருக்கு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பரீட்சைக் காலத்தில் சீரற்ற வானிலையால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் இடையூறுகளை குறைப்பதற்காக தயாரிக்கப்பட்ட இடைக்கால அனர்த்த முகாமைத்துவ திட்டம் பரீட்சைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் நேற்று முன்தினம் குறித்த திட்டம் கையளிக்கப்பட்டதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இந்த மாதம் 29 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி வரை 3 ஆயிரத்து 568 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன.

எனவே, தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழைக்காலத்தில் ஏற்படக்கூடிய தீவிர காலநிலை தாக்கத்தினால் ஏற்படக் கூடிய இடையூறுகளை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பரீட்சைக்கு தோற்றும். பரீட்சார்த்திகளுக்கு டெங்கு நோயினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக் காலத்தில் பரீட்சை நிலையங்களில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு வறுத்தப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற செயலாளர் நாயகமாக குஷானி ரோஹணதீர நியமனம்

(கொழும்பு)



பாராளுமன்ற செயலாளர் நாயகமாக குஷானி ரோஹணதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவினால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாரா்ளுமன்றத்தின் தற்போதைய பணிக்குழாம் பிரதானியாகவும் பிரதிசெயலாளர் நாயகமாகவும் அவர் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

**மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் நடத்துதல் மற்றும் உணவு வழங்குதலுக்குமான பெறுகை- 2023/2024**

மாவட்டச் செயலகத்தினுள் சிற்றுண்டிச்சாலையினை மேற்படி காலப்பகுதிக்கு நடத்துவதற்குத் தகுதியான/தகைமை வாய்ந்த நடத்துநர்களிடமிருந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

விலைக் கேள்விதாரர்கள் மாவட்டச் செயலகத்தில் அலுவலக நாட்களில் 05.06.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.30 மணியினுள் உரிய பெறுகை ஆவணங்களினை பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களினை மாவட்டச் செயலக தொலைபேசி இல- 021 228 5352 லும் http://kilinochchi.dist.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி.**
(ச3562)

ஆவது
**60 அகவையில் பிறந்தநாளும் சேவை நயப்பும்**

தனது 30 ஆண்டுகால ஆசிரிய சேவையில், எமது பாடசாலையில் 09 ஆண்டுகள் சித்திரப் பாடத்தைப் போதித்து அளப்பரிய சேவையாற்றி இன்று 17.05.2023 இல் அகவை அறுபதில் ஓய்வு பெறும்

Congratulations

திருமதி.
**புஸ்பராணி யோகதாசன்**
(பயிற்றப்பட்ட சித்திரம்)

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



சேவை விபரம்

யா/ வட்டு மத்திய கல்லூரி
01.09.1992-14.02.2001
யா/யாழ்ற்றன் கல்லூரி
15.02.2001-22.06.2001
யா/வட்டு மத்திய கல்லூரி.
23.06.2001-20.01.2014
யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை
21.01.2014-05.02.2014
யா/ அராலி சரஸ்வதி
06.02.2014-22.03.2014
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி
23.03.2014 -17.05.2023

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
(15526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர்

180





ஆ! இந்த எலும்புக்கூடு அசைகிறதே! உயிர் பெற்று எழுகிறதே! பொற்காசுகளைப் போலவே சத்தமிடுகிறதே! நமக்கு ஏதோ சேதி சொல்ல எழுந்திருப்பதாய்க் காண்கிறதே!... வல்லவரையனுடைய உடம்பிலிருந்து ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. தனக்குப் பைத்தியந்தான் பிடித்து விட்டது என்று நினைத்தான்.

சீச்சீ! எலும்புக்கூடு எழுந்திருக்கவில்லை! அதற்குள்ளேயிருந்து ஒரு பெருச்சாளி ஓடி வருகிறது! நம் கால் மீது விழுந்து ஓடுகிறது! ஆம் இப்போது பார்த்தால் எலும்புக்கூடு தரையிலே தான் விழுந்து கிடக்கிறது! ஆனால் அது நமக்கு ஒரு சேதி சொல்லுகிறது என்பது உண்மை. "ஓடிப் போ! இங்கே தாமதியாதே! நானும் உன்னைப் போல் உடல் படைத்த மனிதனாயிருந்தேன்.

இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். இங்கேயே மாண்டு மடிந்தேன்! இப்போது எலும்புக்கூடாகக் கிடக்கிறேன்! ஓடிப் போ!" என்று அது நம்மை எச்சரிக்கிறது. இங்கிருந்து, உடனே தப்பிச் சென்றோமோ, பிழைத்தோம். இல்லாவிட்டால் அதோகதி தான் அந்த மனிதனுக்கு ஏற்பட்ட கதிதான்.

வந்தியத்தேவன் அந்த நிலவறையிலிருந்து வெளியேற எண்ணினான். ஆனால் வெளியேறும் வழிதான் தெரியவில்லை. வந்த வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நிலவறையின் ஓரமாக எங்கே போனாலும் இருள் என்னும் பூதம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது.

கீழே பார்த்தால் அதல பாதாளப் படுகுழியாகத் தோன்றியது. ஏறி வந்த படிக்கட்டு எங்கேயோ ஓரிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வந்தியத்தேவன் மேலும் முயன்றான். தேடித் தேடி அலைந்தான். அப்படி அலையும் போது ஓரிடத்தில் சுவர் ஓரமாக ஒரு குப்பல் தங்கக் காசுகள் கிடப்பதைக் கண்டான்.

அந்தக் குப்பலின் மீது ஏதோ வலை பின்னியது போலிருந்தது. உற்றுப் பார்த்த போது, அக்குவியலின் பேரில் சிலந்தி வலை கட்டியிருப்பதாகத் தெரிந்தது. சிலந்தியின் வலை அவனது சிந்தனையைத் தூண்டிவது.

பெரியோர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைச் சிலந்தி வலைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். வலையை விரித்துக் கொண்டு சிலந்தி காத்திருக்கிறது. எங்கிருந்தோ பறந்து வந்து ஈ அதில் அகப்பட்டுக் கொள்கிறது. பிறகு சிறிது சிறிதாகச் சிலந்தி ஈயை இழுத்து விழுங்குகிறது. மூன்று வித ஆசைகளும் அப்படித் தான். மனிதன் வழி தவறிச் சென்று அந்த ஆசை வலைகளில் விழுந்து அகப்பட்டுக் கொள்கிறான் அப்புறம் மீளுவதில்லை! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று ஆசைகளின் இயல்பையும் அன்று ஒரே நாளில் நாம் அனுபவித்தாகி விட்டது. நந்தினி என்னும் பழுவூர் இளையராணி தன்னுடைய வலையில் நம்மை அகப்படுத்தப் பார்த்தாள்.

பழைய வாணர்குல ராஜ்யத்தை அடையலாம் என்னும் மண்ணாசையும் காட்டினாள். கடைசியாக, இங்கே இந்தப் பயங்கரமான பொன்னாசைப் பூதம் நம்மை அடியோடு விழுங்கப் பார்க்கிறது. முதலாவது இரண்டிலிருந்தும் தப்பினோம். இந்த மூன்றாவது அபாயத்திலிருந்தும் தப்ப வேண்டும். நமக்கு எதற்காக இந்த வம்பெல்லாம்? இராஜ்யம் எதற்கு? செல்வம் எதற்கு? பெண்களின் கூட்டுறவுதான் எதற்காக? வானத்தைக் கூரையாகப் பெற்ற அகண்டமான பூமியே நமது அரண்மனை!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நாவினால் சுட்ட வடு



ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகுமுன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய' தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க் அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது. எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள்.

அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத் தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி காண முயல வேண்டும்.
– மெகல்லன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தமிழரை நியமிப்பது பொருத்தமா?

வடக்கு மாகாணத்தின் ஆளுநராகத் தமிழரை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர்கள் நாம்.

தமிழ்ப் பிரதேசத்தில் தமிழர் ஒருவர் ஆளுநராக இருப்பது நல்லது என்ற கருத்தியலில் எந்தத் தவறும் இல்லை.

எனினும் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்ட தமிழர்களை நோக்கும் போது,அவர்கள் இரண்டு விடயங்களில் மிகவும் அவதானமாகவும் விழிப்பாகவும் இருந்தனர்.

அதில் ஒன்று தங்களின் பதவியைத் தக்க வைப்பது. இரண்டாவது தமிழ் மக்களின் கோரிக்கைகளில் இருக்கக்கூடிய நியாயங்களை நோக்காமல், அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படுதல் என்பதே அந்த இரண்டு விடயங்களுமாகும்.

ஆம், வடக்கு மாகாண சபையில் சிங்களவர்கள் தவிர மூன்று தமிழர்கள் இதுவரை ஆளுநராக இருந்துள்ளனர்.

சுரேன் ராகவன், திருமதி பி.எஸ்.சார்ள்ஸ், ஜீவன் தியாகராஜா ஆகியோரே அந்த மூவருமாவர்.

எனினும் இவர்கள் வட மாகாணத்தில் வாழும் மக்களின் நலன்கள் பற்றி இம்மியும் கருசனை கொள்ள முடியாதவர்களாக இருந்தனர்.

அதேநேரம் எந்தத் தீர்மானத்தை எடுப்பதாக இருந்தாலும் அது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்ற ஏக்கம் அவர்களிடம் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இதனால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

பொதுவில் வடக்கின் ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் கிளிநொச்சியில் உள்ள ஓர் உணவகத்தைப் பூட்டிவைத்து நீதிமன்றம் சென்று வில்லங்கப்பட்டதைத் தவிர, அவரால் எதுவும் செய்ய முடியாமல் போயிற்று.

தொடர்ந்து வடக்கின் ஆளுநராகப் பதவியேற்ற திருமதி பி.எஸ்.சார்ள்ஸ் அவர்கள் வடக்கிலுள்ள பொலிஸாரின் ஊழல் தொடர்பில் கருத்துரைத்தார்.

அவ்வளவுதான் அவரின் பதவிக்கு முடிவு வந்தது.

இதனைத் தொடர்ந்து வடக்கின் ஆளுநராகப் பதவியேற்ற ஜீவன் தியாகராஜா அவர்கள் வடக்கின் தலைசிறந்த நிர்வாகிகளைக் குழப்பியடித்து மொக்கேனப்பட்டதோடு, தன்னை வட மாகாணப் பாடசாலைகளின் ஆளுநராக ஆக்கிக் கொண்டு அபயம்... அபயம்... என்றதோடு அவரின் பதவியும் முடிவுற்றது.

நிலைமை இதுவாக இருக்கையில், வடக்கு மாகாணத்தின் ஆளுநராக தமிழர் யார் வந்தாலும் அவரால் எதுவும் செய்யமுடியாதென்பதுடன் எங்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறி அதற்குப் பரிகாரம் தேடுகின்ற திராணியும் தமிழ் ஆளுநர்களிடம் இருக்கப் போவதில்லை.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது, நேர்மையான சிங்களவர் ஒருவர் வடக்கின் ஆளுநராகப் பதவியேற்றால் அது பரவாயில்லை என்று எண்ணுகின்ற அளவிலேயே நிலைமை இருக்கிறது.

ஏனெனில் சிங்களவர் ஒருவர் ஆளுநராக இருக்கும்போது, அவர் வடக்கு மக்களின் தேவையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு செயலாற்றுவார்.

தவிர, வட மாகாண நிலைமைகளை ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறுகின்ற முறைமையும் எமக்குச் சாதகமாக இருக்கும் என்பதால், வடக்கு மாகாண ஆளுநராக யார் இருப்பது பொருத்தம் என்பதை நாம் ஆழ்ந்தகன்று ஆராய்வது நன்மை தருவதாக அமையும்.

# வடக்கு,கிழக்கு மாகாணங்களில் சட்ட ஒழுங்கு மீறப்படுகின்றது

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் சட்டம் மற்றும் ஒழுங்குகள் மீறப்படுகின்றன. சிங்கள தரப்பினர்கள் தாங்கள் விரும்பியவாறு செயற்படுகின்றனர் என ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாட்களாக கொழும்பில் பெருமளவிலான பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கத்துக்கு எதிராக சதித் திட்டமொன்று கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இந் நிலையில் திருகோணமலையில் அரச உத்தரவையும் மீறி பௌத்த பிக்குகள் புத்த சிலைகளை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் கொழும்பை பொறுத்தவரையில் அரசாங்கத்துக்கு எதிராக சதித் திட்டம் தீட்டப்படுகின்றது என பரவியுள்ள கற்பனை தகவலிற்கமைய பலத்த பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,9)

## வெலிகமையில் துப்பாக்கிச் சூடு தந்தை பலி;மகன் காயம்

(கொழும்பு)

வெலிகமை - தெனிபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் படுகாயமடைந்த மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தந்தை மற்றும் மகன் மீதே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் மீது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய 50 வயதான தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில் காயமடைந்த 20 வயதான மகன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுக்கு T56 ரக துப்பாக்கி பயன் படுத்தப்பட்டுள்ளமை பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாக பணமோசடி

### கட்டுநாயக்காவில் பெண் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவதாக தெரிவித்து ஏமாற்றி பணமோசடி செய்துள்ளதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ள பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருணாகல் நீதிவான் நீதிமன்றம் வழங்கியிருந்த உத்தரவுக்கமைய குறித்த பெண் வெளிநாட்டுக்கு சென்றிருந்து நாட்டுக்கு வந்த சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் அவரை அடையாளம்கண்டு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் ஒப்படைத்துள்ளதுடன் அங்கு குறித்த பெண் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். குருணாகல் பிரதேசத்தில் வெளிநாட்டு முகவர் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாக தெரிவித்து ஒரு கோடியே 10 இலட்சத்துக்கும் அதிக பணம் பெற்றுள்ளதாக கைது செய்யப்பட்டுள்ள பெண் மற்றும் மேலும் இரண்டு பேருக்கு எதிராக 48க்கும் அதிக முறைப்பாடுகள் பணியகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்கள் ருமேனியாவில் ஹோட்டல் ஒன்றில் 2 இலட்சம் மாத சம்பளம் உள்ள தொழிலை பெற்றுத்தருவதாக தெரிவித்து நாட்டில் பல்வேறு பகுதிகளில் நபர்களை ஏமாற்றி பண மோசடி செய்துள்ளனர்.

சந்தேகநபர் சில மாதங்களுக்கு முன்னர் மலேசியாவுக்கு சென்றிருந்தார். அவர் மீண்டும் நாட்டுக்கு திரும்பியபோதே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,9)

## வவுனியாவில் மரக்கடத்தல் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு

### படைவீரர் ஒருவர் காயம்;சாரதி தப்பி ஓட்டம்

(வவுனியா)

வவுனியாவில் சட்டவிரோத மரக்கடத்தல் விஷேட அதிரடி படையினரால் முறியடிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்மடு, சாளம்பன் பகுதியில் பொலிஸ் விஷேட அதிரடிப்படை அதிகாரிகள் சட்டவிரோத மரக்கடத்தல் ஒன்றினை சுற்றி வளைப்பதற்காக சென்ற போது சந்தேகத்திற்கிடமான வாகனத்தை நிறுத்துமாறு வழி மறித்த போது குறித்த வாகனம் விஷேட அதிரடிப்படை பொலிஸ் கான்ஸ்டபிள் மீது மோதியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த வாகனத்தை நிறுத்துவதற்கு வாகனத்தின் முன் சக்கரத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டபோது கப் ரக வாகனத்தில் இருந்த சந்தேக நபர் வாகனம் ஓடிக் கொண்டிருக்கும் போது வாகனத்தில் இருந்து தப்பிச் சென்றதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இதில், விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் சந்திரதிலக என்பர் சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த உத்தியோகத்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், உத்தியோகத்தரின் காயங்கள் பாரதூரமானதாக இல்லாததால் சிகிச்சை பெற்று வெளியேறியதாகவும் விஷேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வாகனத்தையும் அதனுள் இருந்த சட்டவிரோதமாக ஏற்றி செல்லப்பட்ட ஏழு பெரிய முதிரை மரக்குற்றிகளும் ஈச்சங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,9,299)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம், அழகல்ல (தீருவேகம), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## மட்டக்களப்பு கல்லடியில் மீன் பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதிக்கு அருகிலுள்ள வாவியில் மீன் பிடிக்கச் சென்றவர்களில் ஒருவர் தோணி கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்முனை - பாண்டிருப்பு எல்லை வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய உதயராஜன் தனேஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் வெளிநாட்டில் இருந்து வந்து கல்லடிப் பிரதேசத்தில் திருமணம் முடித்து மூன்று மாதங்களான நிலையில் அடுத்த வாரம் மீண்டும் வெளிநாட்டுக்குச் செல்லத் தயாராக இருந்துள்ளார். இந்த நிலையிலேயே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

12

கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இது கடலின் இடைப்பகுதியில் வழிந்து சென்று மீன்களைச் சிக்கவைப்பதினால் இப்பெயர் உண்டானது. இவ் வலையினால் கடலின் இடைப்பகுதியில் உள்ள மீனினங்கள் யாவும் பிடிக்கப் படுகின்றன. இதன் அமைப்பு மீனைக் கழுத்தில் சிக்க வைத்து பிடிப்பதனால் வலையில் சுருக்கம் தேவை. இது குழைவுச் சுருக்கம் எனப்படுகிறது.

வழிச்சல் வலை (Drift gill net)




இடைப் பகுதியில் வழிந்து செல்ல வேண்டியுள்ளமையினால் இதன் மிதவைத் தன்மையும், பாரமும் வலையின் தொழிற்பாட்டுக்கு அமைகின்றன. எந்த மட்டத்தில் கடலில் வழிச்சல் நடைபெற வேண்டுமோ அதற்கு ஏற்ப மேல் பொருத்தப்பட இருக்கும் மிதப்புக்கள் இணைக்கப்படுகின்றன. இவ் வழிச்சல் வலையினது கண்ணின் அளவுக்கேற்பவே வலையின் பெயுர்கள் வேறுபடுகின்றன. கண்ணின் அளவுக்கேற்பவே வெவ்வேறு இனமீன்களும் பிடிக்கப்படுகின்றன.

### முப்புரி வலைகள்

முப்புரி (அல்லது மும்மை) வலைகள் (படம்-m) செவுள் வலையைப் போலவே இருக்கும். ஆனால் அவை மூன்று அடுக்கு வலைகளால் ஆனவை. பெரிய கண் அமைப்பைக்கொண்ட (14"-36") இரண்டு வெளிப்புற அடுக்குகள். அவற்றுக்கிடையே சிறிய கண் அமைப்பைக் கொண்ட (1"-1.5") அடுக்குடன் இணைக்கப்பட்டுள்ளது . முதன் முதலில் ஜப்பானில் இவ் வலை அறிமுகப்படுத்தப்பட்டது. மீன்கள் பெரிய கண்களில் சிக்காது உட்புறம் அமைந்த சிறிய கண் அமைப்பு வலையில் ஒருபை போன்ற அமைப்புக்குள் அகப்படுகின்றன.

சிறிய கண்ணி வலையின் உள் அடுக்கு வெளிப்புற இரண்டு அடுக்குகளை விட மிகவும் தளர்வானது. இது இரண்டு வெளிப்புற அடுக்குகளை விட மிகவும் ஆழமாக செய்யப்படுகிறது. இறால், சிங்க இறால் போன்றவை பைகளில் அகப்பட்டு வெளியே எடுக்கும் வரை உயிருடன் இருக்கின்றன. வலையின் மேற்பகுதியில் மிதவைகளும், அடிப்பகுதியில் பாரங்களும் இணைக்கப்பட்டு செங்குத்தாக நிற்பதற்காக மேல் வலைக்கயிற்றில் இடையிடையே பெரிய மிதவைகள் மிதக்கவிடப்படுகின்றன. இவ்வலை ஏனைய மிதப்பு வலைகள் போல் அல்லாது சுருக்கம் கூடியதாக் காணப்படுகிறது.




முப்புரி வலை (Trammel) படம் -m

முப்புரி வலையில் (Trammel net) மீன் அகப்படல்



இவை கற்பார்கள் உள்ள பகுதிகளில் விடப்பட்டு அப்பகுதிக்குரிய மீன்கள் பிடிக்கப்படுகின்றன. திருக்கை, நண்டு, இறால், சிங்க இறால், விளைமீன், சிறியன-பெரியனவும் அகப்படுகின்றன. இவ் வலையின் உயரம் 9 அடியாகும். கண் அளவுகள் மீன்களுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்படுகின்றன. இவ்வலையே இங்கு டிஸ்கோ வலை என அழைக்கப்படுகின்றது. இது இலங்கையில் 1980 தசாப்தத்தில் பிரபலமாக விளங்கிய வலை வகையாகும்.வெளிநாடுகளில் ஒரு சிறிய கண்வலையும் ஒருபெரிய கண் வலையும் பொருத்திய இரட்டை வலை உண்டு. மீன் இருக்கும் இடத்தின் பக்கம் பெரியகண்ணுள்ளபக்கம் வைக்கும்வகையில் இவ் வலைஅமைக்கப்பட்டு விடப்படும்.




### சுற்றிவளைப்பு வலை

இவ் வலை இருபடகுகளின் உதவியுடன் ஆழ் கடலில் காணப்படும் மீன்கூட்டங்களைச் சுற்றிவளைத்துப் பிடிக்க உதவுகின்றன. மேல் வலைப்பகுதியில் மிதவைகளும். அடி வலையின் பாரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சுற்றிவளைக்கப்பட்ட பின்னர் வலையின் இரு அந்தங்களும் ஒன்றாக்கப்பட்டு கீழ் கயிற்றின் மூலம் இழுத்துச் சுருக்கப்படுகின்றன. (படம்-P).

இதனால் மீன் கூட்டங்கள் அடைக்கப்படுகின்றன. பின்னர் சிறிய அத்தாங்கு மூலம் மீன் அள்ளி எடுக்கப்பட்டு படகினுள் போடப்படுகின்றன. கடலில் உள்ள மேல்தள, அடித்தள, நடுத்தள மீன்கள் இதில் பிடிபடுகின்ற போதிலும் நடுத்தளத்திற்குரிய இன மீன்களே கூடுதலாக பிடி படுகின்றன. குறிப்பாக சூரை, சூடை, கும்பளா, பாரை, போன்றவை அதிகமாக அகப்படுகின்றன. விருத்தி அடைந்த நாடுகளிலேயே இவ்வலை அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ் வலையானது சிறிய கண் அமைப்பைக் கொண்டது. கண்களில் மீனைச் சிக்கவைத்துப் பிடிக்காது அவற்றை வளைத்துப் பிடிக்கவே இது பயன்படுத்தப்படுகின்றது.

### ஒருபடகால் இயக்கப்படும் சுருக்குவலை (கம்பிலி வலை)

மீன்கள் இருக்கும் இடத்தில் ஒரு கம்பிலி வலையின் மேற்பகுதி கடலின் மேற்பரப்பில் மிதக்கவிடப்படுகிறது.வலையின் அடிப்பகுதியில் எடைகள் இணைக்கப்பட்டுள்ளன. அவை வலையின் சுவர்களை கீழே இழுக்கும். அவ்வலை கிணறு போன்ற வடிவமாக இருக்கும்.

வலையின் அடிப் பகுதியில் வளையங்கள் ஊடாகச் செல்லும் கயிற்றை இழுத்து இறுக்கும் போது மீன்கள் அதற்குள் அகப்பட்டுவிடும். அதாவது கீழ்ப் பகுதியில் இருக்கும் உலோக பந்துடன் இணைக்கப்பட்டுள்ள சுருக்கை இழுப்பர். அப்போது மீன்கள் கொத்தாக வலைக்குள் சிக்கும்.

அதன்பின், மேல் பகுதியைச் சுருக்கி வெளியே எடுப்பர். இதனால் சிறியது முதல் பெரியது வரை அனைத்து ரக மீன்களும் சிக்கும். பின்னர் அவ்வலை மீன்களுடன் படகுக்குள் எடுக்கப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயில் எரிந்த...

சடலத்தை கண்டு, பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

உயிரிழந்தவரின் மனைவியும் சிறிது காலத்தின் முன்னரே குளியலறையில் வழுக்கி விழுந்து உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

## பல்கலைக்கழக...

துறையினை தனியாருக்கு விற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பு - விகாரமகாதேவி பூங்காவிலிருந்து சுகாதார அமைச்சை நோக்கி பல்கலைக்கழக வைத்தியத் துறை மாணவர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தினை கட்டுப்படுத்தும் வகையில் ஏராளமான பொலிஸார், கலகத் தடுப்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் தயார்ப்படுத்தப்பட்டிருந்தனர். (ம-7,9)

## தமிழ் அரசியல்...

டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு கொழும்பு - பித்தளை சந்தியில், அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிவலிங்கம் ஆரூரன் என்பவர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டார். (ம-7,9)

## மே - 18 நினை...

வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்புரிமை அமைப்பான அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் மே 18 நினைவேந்தல் நிகழ்வானது கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நரிப்புல்தோட்ட கிராமத்தில் குறித்த நினைவேந்தலும், கஞ்சி வழங்கும் நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனை அகம் மனிதாபிமான வள நிலைய உத்தியோகத்தர் பத்மநாதன் சிரோஜன் (வயது-29) முன்னெடுத்திருந்தார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரும் அரச புலனாய்வுத் துறையினரும் அவரை அவ்விடத்தில் கைது செய்து விசாரணைக்காக ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகின்றது. (ம-7,9)

## சிறுவர் கடத்தல்...

ரிடம் ஒப்படைக்கப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் காணாமல்போனமை தொடர்பாக ஏற்கெனவே குடும்பத்தினரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை சிறுவர்களை கடத்த முயன்றார் என அப்பகுதி மக்களால் நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

மக்களால் ஒப்படைக்கப்பட்ட நபரிடம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விடயம் தெரியவந்துள்ளது. அண்மைக் காலமாக சிறுவர் கடத்தல் தொடர்பாக பல கருத்துக்கள் வெளிவரும் நிலையில் குறித்த விடயம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. (ம-7,9,33)

## வடக்கில்...

ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் அமைந்துள்ள சின்னசாளம்பன் கிராமத்தில் கடத்தல் முயற்சி ஒன்று இடம்பெற்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சின்ன சாளம்பன் கிராமத்தில் பாடசாலைக்கு சென்று வீடு திரும்பிய இரு மாணவி களை இலக்கு வைத்தே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து கிராமவாசி ஒருவர் தெரிவிக்கையில்,

குறித்த இரு மாணவிகள் பாடசாலை முடித்து வீடு திரும்பும் போது இரு வாகனங்கள் மாணவிகளை பின் தொடர்ந்ததாகவும் அதில் கூலர் ரக, ஹயஸ் ரக வாகனங்கள் பின்தொடர்ந்த நிலையில் ஒரு வாகனத்தில் இருந்து கதவு திறந்த ஐந்து பேர் கொண்ட குழுவினர் அந்தச் சிறுமிகளை தாம் வீட்டுக்கு கொண்டுவந்து விடுவதாகவும் கூறியுள்ளனர்.

குறித்த குழுவினரின் நடவடிக்கைகளினால் சுதாகரித்த சிறுமிகள் அங்கிருந்து தப்பியோடி அருகில் உள்ள வீடு ஒன்றிற்குள் தஞ்சமடைந்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,299)

## அம்மன்...

குறித்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரஸ்தாப அம்மன் சிலையை அகற்றக்கோரி வழக்குத் தாக்கல் செய்யும் நியாயாதிக்கம் பொலிஸாருக்கு இல்லை எனத் தெரிவித்த நீதிபதி அ.ஆனந்தராஜா வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கினார்.

கடந்த தமிழ்ப் புத்தாண்டில் நள்ளிரவு வேளை பிரஸ்தாப நாகபூசணி அம்மன் சிலை பண்ணை சுற்றுவட்டத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

இச்சிலையை அகற்றுவதற்கு நீதிமன்ற அனுமதி கேட்டு யாழ்ப்பாணப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை சிலையை அவ்விடத்தில் இருந்து அகற்றக்கூடாது என இந்து அமைப்புகள் கோரிக்கை விடுத்ததுடன் அந்த அமைப்புகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலரும் மன்றில் ஆஜராகியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## முள்ளிவாய்க்...

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடு 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

இதன் ஒரு அங்கமாக தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையை இளஞ் சந்ததியினருக்கு கொண்டு சேர்க்கும் வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவுப் படங்கள் தாங்கிய ஊர்திப் பவனியானது கடந்த 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நாளை 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை சென்றடையவுள்ளது. (ம-7,9,33)

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/05/2023 · சீட்டிழுப்பு இலக்கம் 1571
வெற்றி இலக்கங்கள்: கும்பம் 0 9 0 7 3 2
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய
திகதி - 2023.05.16 · சீட்டிழுப்பு இலக்கம் - 1146
ஆங்கில எழுத்து Z · வெற்றி இலக்கங்கள் 21 33 48 68

### கொவிசெத
திகதி 2023.05.16 · சீட்டிழுப்பு இலக்கம் 3358
ஆங்கில எழுத்து C · வெற்றி இலக்கங்கள் 27 44 46 49
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 16/05/2023 · சீட்டிழுப்பு இலக்கம் 1464
U 24 · வெற்றி இலக்கங்கள் 31 69 73 77

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.16 · சீட்டிழுப்பு இலக்கம் 425
மீனம் · வெற்றி இலக்கங்கள் 03 04 08 59 · மீனம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2023/05/16 · சீட்டிழுப்பு இலக்கம் 5116
P 8 0 4 6 2 2
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2090 · நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.16 · தினம் செவ்வாய்க்கிழமை
A 01 20 52 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,964,460/-
DLB

### சனிதா
செவ்வாய்க்கிழமை · சீட்டிழுப்பு திகதி:2023.05.16 · வெற்றி வாரம்: 4251 · வர்ணம்: பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,241,392.90
வெற்றி இலக்கங்கள் 02 29 47 75 · ஆங்கில எழுத்து S
DLB

### சசிரி
வாரம் 324 · திகதி 2023.05.16 · ஊதா
வெற்றி இலக்கங்கள் 01 07 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,862,940/-
DLB

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,361,997.80
திகதி 2023-05-16 · வெற்றி வாரம் 3802 · வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 14 42 43 54 · மேஷம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,034,180/-
DLB

### லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 09 62 63 74 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 330,248,799.00
1266 · 2023.05.16 · செவ்வாய்
DLB

### அட கோடிபதி (ADA KOTIPATHI)
செவ்வாய்க்கிழமை · வெற்றி வாரம்: 1916 · வர்ணம்: கரும் நீலம் · சீட்டிழுப்பு திகதி: 2023.05.16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 50,555,298.60
வெற்றி இலக்கங்கள் 05 09 14 41 · ஆங்கில எழுத்து X
DLB

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15529)

**076 825 7716** (ஆகாஸ்)



புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும்
தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

## நுண்ணறிவு

ஆக்கம் : திரு. M. சுகந்தன் (B.A, Dip. In. Teaching, PGDE) மானிப்பாய் மகளிர் கல்லூரி.

1400 ற்கும் மேற்பட்ட வினாக்களின் தொகுப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பகுதி I வினாத்தாளின் முழுமையான பாடப்பரப்புக்களை உள்ளடக்கிய நுண்ணறிவு வினாக்களும், விளக்கமான விடைகளும் அடங்கியது.

**Hotline : 0777220324 / 0776258778** (C-6548)

யுனிலங்காஸ் வெளியீடு - எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.



## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (13357)



077 544 8503



## விசேட விலைக்கழிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில்,ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள்,வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். (C-6563)

**021 222 2567**

சிவா நறுமணப்பூங்கா,
இல-288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 78 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை - கடல், தெற்கு எல்லை - பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை பத்து இலட்சம் ரூபாய் (1000,000/=).



**076 911 9371, 076 739 0413, 077 874 8135**

(15540)



க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
யாழ்.இந்துக் கல்லூரி கணித ஆசிரியர்
அமரர் செல்லையா தவராஜா அவர்களின் ஞாபகார்த்த

## இலவசக் கருத்தரங்கு

| | |
|---|---|
| 21.05.2023 ஞாயிறு<br>காலை 8.30 மணி | பெரியவளவு மகா கணபதி மண்டபம்<br>சித்தங்கேணிச் சந்தி |
| 22.05.2023 திங்கள்<br>காலை 8.30 மணி | D.C.M கல்வி நிலையம்<br>வேம்படி மகளிர் கல்லூரி அருகில் |

யாழ்.முன்னணி ஆசிரியர்களினால் கணிதம் பகுதி I,II விஞ்ஞானம் பகுதி I,II பாடங்களுக்கான கருத்தரங்கு கொழும்பு பிரபல பாடசாலைகளின் வினாத்தாளுடன் கூடிய அச்சடிக்கப்பட்ட கையேடுகளுடன் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கு தேவையான எழுது பொருட்களும் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு : 075 024 2472

**தமிழ் மக்கள் கூட்டணி**
கல்வி மேம்பாட்டுப் பிரிவு

(C-6567)



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6568)




Srilankan Visa Extension

இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

**0777-068-777**



## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Account Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு

**077 367 1062** (15534)


# 1 ஆம் ஆண்டு நினைவுகளுடன்

## நவரட்ணராஜா சங்கீத்காந் (சங்கி)

புன்னகை பூத்த மலரொன்று
பூமியிலே விதைக்கப்பட்ட நாள்...



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
கண்மூடித் திறக்கும் முன்னே - எம்மை
கடந்து சென்று விட்டாய்
என்றென்றும் நீ எங்களுடன் இணைந்திருப்பாய் - என
எண்ணிலா கனவுகள் கண்டிருந்தோம்
இடை நடுவில் எங்களை தவிக்கவிட்டு
ஏன் சங்கி மறைந்து விட்டாய்
காலன் உன்னை காலத்தால் அழைத்த வேளை
அத்துன்பத்தை ஏற்றுக் கொள்ள - எம்
மனத்தால் முடியவில்லை
விதி செய்த சதி தானே என்று
எம் மனது எண்ணினாலும் அது கொஞ்ச நேரம்
எங்களுக்கு நாங்களே சொல்லும் மன ஆறுதல் தான்-
இந்த உலகில் உன்க்கு நிகர் நீ தான் சங்கி
உன் இடத்தை நிரப்ப இந்த பூமியிலே
யாரும் இல்லையடா சங்கி
எப்போதுமே நீ எங்கள் இதயங்களில் செல்லமாய் குடியிருப்பாய்
எம் உயிர் உள்ளவரை நீ எங்கள் நிழலாய் தொடர்வாய் - சங்கி
கல்லறை வாழ்வில் வருடம் ஒன்று சென்றாலும்
எங்கள் நெஞ்சறைக் கூட்டில் அழியாத ஓவியம் சங்கி நீ
இன்னொரு பிறப்பு இருப்பது உண்மையெனில்
அப்போதும் நீயே எங்கள் சங்கியாக வந்து
பிறக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றோம்...

அன்னை மடியில்
11.08.1990

ஆண்டவன் அடியில்
28.05.2022



31, கற்குள லேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

077 529 2000

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.